## கோவை தெற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கோவை தெற்கு மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.அமுதபாரதி அவர்கள், பொள்ளாச்சி தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், எம்.அமுதபாரதி அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

கோவை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, **பிப்ரவரி 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் கோவை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருவாரூர் மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருவாரூர் மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், திருத்துறைப்பூண்டி நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வருவதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், ஆர்.எஸ்.பாண்டியன் அவர்கள், தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, **பிப்ரவரி 17 (செவ்வாய்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.."** என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு **ஜி.பாலசுப்ரமணியன்** அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவாரூர் மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக**

**திரு. ஜி. பாலசுப்ரமணியன்,** வடக்கு தெரு, தலையாமங்கலம், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் - 614 016 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## வேலூர் தெற்கு மாவட்டம்

# பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்! தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டம், வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதில், வேலூர் தெற்கு மாவட்டத்தில், மாவட்டப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், வேலூர் தெற்கு மாவட்டம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, **பிப்ரவரி 17 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**"என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

வேலூர் தெற்கு மாவட்டம், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு **எஸ்.தாமோதரன்** அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**வேலூர் தெற்கு மாவட்ட பொருளாளராக,**

**திரு. எஸ்.தாமோதரன்,** பி.இ., பழைய எண்.9/1, புதிய எண்.16, புதுத் தெரு, சங்கரன்பாளையம், வேலூர். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 23-2-2026 திங்கட்கிழமை காலை 10.00 மணி அளவில், தஞ்சை மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்
2. எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 16.02.2026

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.





முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக, ரூ.100 கோடி மதிப்பில் ஓசூர் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி தரை தளத்துடன் கூடிய ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, ஓசூர் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம் , ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

கோவை தெற்கு மாவட்டம், வெள்ளலூர் பேரூரைச் சேர்ந்த வி.ஜெயக்குமார் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

தலைவர் - ப. அருண் 39, சிவசெல்லம்மாள் லே அவுட், அண்ணாகுடியிருப்பு, எஸ்.வி. மில் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - செ. சிவக்குமார் 2/45, வ.உ.சி. தெரு, திப்பம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642107, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - வி. ரகுபதி 2-123, மூங்கில் தொழுவு அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642202, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. சாமிதுரை 696, சுகர்மில் ரோடு, பாப்பான்குளம், மடத்துக்குளம் - 642024, திருப்பூர் மாவட்டம். 2) வே. பிரபாகரன் 2/40, கணபதிபாளையம், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642122, திருப்பூர் மாவட்டம். 3) தே. ஞானசேகர் 3/310, சுங்காரமடக்கு, வடுகபாளையம், பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம். 4) கா. தனபாலன் 3/83பி, சின்னவீரம்பட்டி, புக்குளம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம். 5) கை. கந்தர்மணி 1/243, தெற்கு தோட்டம், எலையமுத்தூர், உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம். 6) ர. அபுதாஹிர் 4/152டி, மெயின் ரோடு, சோழமாதேவி மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 7) சி. கிருஷ்ணசாமி 4/224, தளி மெயின் ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை - 642112, திருப்பூர் மாவட்டம்.

**தஞ்சை தெற்கு மாவட்டம்**

தஞ்சை தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட செ. அருள்நம்பி அவர்கள் சேதுபாவாசத்திரம் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக, **அ. ஆனந்தகுமார்,** (72, நடுத் தெரு, கரம்பயம், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சை மாவட்டம்.) அவர்கள் தஞ்சை தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**நீலகிரி மாவட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எச்.செல்வராஜ் அவருக்கு பதிலாக, **எ.கே.வி.தீனதயாளன்,** (1/2எ, கோடமலை கிராமம், ஸ்பிரிங் பீல்டு அஞ்சல், குன்னூர், நீலகிரி மாவட்டம்.) அவர்கள் நீலகிரி மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**தேனி வடக்கு மாவட்டம்**

தேனி வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளராக **ஆர். கருத்தப்பாண்டி,** (பழைய ஆர்.டி.ஓ. ஆபீஸ் ரோடு, முத்துராமலிங்க தேவர் தெரு, டி. கள்ளிப்பட்டி, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளராக **சி. முருகன்,** (இந்திரா நகர், வேர்க்காடு, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.2.2026

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மேற்கு மாநகரம், தச்சநல்லூர் வடக்கு பகுதி 28-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மேற்கு மாநகரம், தச்சநல்லூர் வடக்கு பகுதி 28-வது வட்டக் கழகச் செயலாளர் கிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **ஐ.ஆறுமுகம்** (28, முத்துராமலிங்கபுரம் தெரு, திருநெல்வேலி டவுண் - 627 006.) அவர்கள் 28-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## மொழியியல் முதல் ஆய்வரங்கம்!

# சமற்கிருதத்துக்குத் தமிழின் கொடை!

### செந்தலை ந.கவுதமன் – பேராசிரியர் அருளியார் – பொழிலன் உரை!

*சென்னை, பிப்.19-*

பாவலரேறு தமிழ்க் களம், தமிழக மக்கள் முன்னணி, அருளியார் மொழிப் புலம் அமைப்புகளின் சார்பில் சென்னை, கவிக்கோ அரங்கில் 21.2.2026 சனிக் கிழமை மாலை 5 மணிக்கு 'சமற்கிருதத் துக்குத் தமிழின் கொடை' முதல் ஆய் வரங்கம் நடைபெறு கிறது.

மொழியியல் அறி வியல் வழி மெய்ப் பிக்கும் மாதம் ஒரு தொடர் கருத்தரங் கத்தின் முதல் அரங்க மான இந்நிகழ்வில் அறிஞர் கோ.தாம ரைக்கோ நிகழ்வு நிர லில், தோழர் பொழி லன் நோக்கமும் ஒருங்கிணைப்பில், சூலூர் பாவேந்தர் பேரவை - புலவர் செந்தலை ந.கவுதமன் வாழ்த்தும் தொடக்க வுரையும் நிகழ்த்து கிறார்.

பேராசிரியர் அருளியார் ஆய்வுப் பொழிவு நிகழ்த்து கிறார்.

## விருதுநகர் தெற்கு மாவட்டம்

## ராஜபாளையம் மேற்கு ஒன்றியம்

# சேத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

விருதுநகர் தெற்கு மாவட்டம், ராஜபாளையம் மேற்கு ஒன்றியம், சேத்தூர் பேரூர்ச் செயலாளர் பி.ஏ.சிங்கம்புலி அண்ணாவி அவர்கள், வயது மூப்பின் காரணமாக தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **போ.சுந்தர்** (15-பி, ஆராய்ச்சியாளர் தெரு, சேத்தூர் - 626 121. விருதுநகர் மாவட்டம்) அவர்கள் சேத்தூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தஞ்சை மத்திய மாவட்டம் – தஞ்சை மாநகரம்,

# மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகச் செயலாளர் சா.சதாசிவம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **அ.அசார் (எ) வாசிம் ராஜா** (21, ரமணி நகர் 1வது தெரு, மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்) அவர்கள் மருத்துவக் கல்லூரி பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 17.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.என்.எம்.உபயதுல்லா
### பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வருந்தவர்.

2020–ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**